# January 20, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தமிழக சட்டப் பேரவை கூட்டத் தொடர் ஆளுநர் ஆர்.என்.ரவி உரையுடன் செவ்வாய்க்கிழமை (ஜன.20) தொடங்குகிறது. தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ள நிலையில், இந்தக் கூட்டத் தொடரில் அனல் பறக்கும் விவாதங்கள் எழும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2. செங்கல்பட்டு மாவட்டம் நெம்மேலியில் ரூ.342.60 கோடியில் 'மாமல்லன்' நீர்த்தேக்கம் அமைப்பதற்கான பணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

(i) மாமல்லன்' புதிய நீர்த்தேக்கம் வாயிலாக நாளொன்றுக்கு 170 மில்லியன் லிட்டர் குடிநீரை மக்களுக்கு வழங்கமுடியும்.

3. தென்சீனக் கடலை ஒட்டியுள்ள பிலிப்பின்ஸின் கடல் எல்லைப்பகுதியில், புதிய இயற்கை எரிவாயு இருப்பு கண்டறியப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிபர் ஃபெர்டினாண்ட் ஆர்.மார்கோஸ் ஜூனியர் அறிவித்தார்.

(i) பலாவன் மாகாணத்தின் வடமேற்கே, தற்போது பயன்பாட்டில் உள்ள மலாம்பாயா எரிவாயு வயலுக்கு மிக அருகிலேயே சுமார் 5 கி.மீ. தொலைவில் இந்தப் புதிய வளம் கண்டறியப்பட்டுள்ளது. இதில் சுமார் 9,800 கோடி கனஅடி எரிவாயு இருக்கலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆண்டுக்கு சுமார் 57 லட்சம் வீடுகளுக்குத் தேவையான எரிசக்தியை வழங்க முடியும்.

(ii) பிலிப்பின்ஸின் முக்கிய எரிசக்தி ஆதாரமாக விளங்கும் மலாம் பாயா எரிவாயு வயல், இன்னும் சில ஆண்டுகளில் தீர்ந்துவிடும் என்று நிபுணர்கள் எச்சரித்து வந்தனர். இத்தகைய சூழலில், இந்தப் புதிய கண்டுபிடிப்பு அந்நாட்டின் எரிசக்தி பாதுகாப்புக்கு வலுசேர்த்துள்ளது. குறிப்பாக, நாட்டின் தொழில் மற்றும் வர்த்தக மையமான லூசோன் பிராந்தியத்தின் எரிசக்தி தேவையைப் பூர்த்தி செய்ய இது முக்கியப் பங்காற்றும் என எதிர்பார்க்கப்படு கிறது.

(iii) தென்சீனக் கடல் பகுதியில் சீனாவுக்கும் பிலிப்பின்ஸுக்கும் இடையே நீண்டகாலமாக எல்லைப் பிரச்னைகள் இருந்து வருகின்றன. இந்நிலையில், பிலிப்பின்ஸின் சொந்தப் பொருளாதார மண்டலத்துக்குள் இந்த எரிவாயு இருப்பு கண்டறியப்பட்டுள்ளது கவனம் பெற்றுள்ளது.

4. சீனாவில் 1949-ஆம் ஆண்டு கம்யூனிஸ புரட்சிக்குப் பிறகு, மிகக் குறைந்த 5.63 சதவீத பிறப்பு விகிதம் கடந்த ஆண்டு பதிவாகியுள்ளது.

(i) கடந்த ஆண்டில் சீனாவில் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை வெறும் 79.2 லட்சமாகும். இது முந்தைய ஆண்டைவிட 16.2 லட்சம் (17 சதவீதம்) குறைவாகும்.

(ii) சீன நாள்காட்டியின்படி கடந்த ஆண்டு 'பாம்பு' ஆண்டாக கருதப்பட்டதால் ஜோதிடரீதியான நம்பிக்கைகளும் இந்த வீழ்ச்சிக்கு ஒரு காரணமாகக் கூறப்படுகிறது. எனினும், கடும் பொருளாதார நெருக்கடி, குழந்தை வளர்ப்புக்கான அதிக செலவினம், வாழ்க்கை முறை மாற்றம் ஆகியவையே மக்கள் குழந்தை பெற்றுக்கொள்ளத் தயங்குவதற்கு முக்கியக் காரணிகளாகக் கருதப்படுகிறது.

(iii) 2024-இல் பிறப்பு விகிதம் சற்றே அதிகரித்தது ஒரு தற்காலிக மாற்றம் என்பதை

இந்தப் புதிய புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. முன்னதாக, 2023 வரை தொடர்ந்து 7 ஆண்டுகளாக பிறப்பு விகிதம் சரிந்து கொண்டே வந்தது குறிப்பிடத்தக்கது.

(iv) கடந்த 2023-இல் உலக மக்கள்தொகையில் இந்தியாவிடம் பின்தங்கிய சீனா, தற்போது தொடர்ச்சியாக 4-ஆவது ஆண்டாக மக்கள்தொகை சுருக்கத்தைச் சந்தித்து வருகிறது. 2025 புள்ளிவிவரப் படி, அந்நாட்டின் மக்கள் தொகை 140.4 கோடியாகக் குறைந்துள்ளது. இது முந்தைய ஆண்டைவிட 30 லட்சம் குறைவாகும்.

(v) சீனாவில் தற்போது 60 வயதைக் கடந்தவர்களின் எண்ணிக்கை 32.3 கோடியாக அதிகரித்துள்ள நிலையில், இளம் தலைமுறையினரின் எண்ணிக்கை குறைந்து வருவது அந்நாட்டின் வருங்காலப் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது.

(vi) இதையொட்டி, குழந்தை பெற்றுக்கொள்ளும் தம்பதிகளுக்கு நேரடி ஊக்கத்தொகை வழங்குதல், திருமணச் சேவைகள் மற்றும் ஆரம்பப் பள்ளிகள் போன்ற துறைகளுக்கு வரி விலக்கு அளித்து ஆதரவு தருதல் போன்ற நடவடிக்கைகளை சீன அரசு எடுத்து வருகிறது.

5. அமெரிக்காவின் காஸா அமைதி வாரியத்தில் இணைய ரஷிய அதிபர் விளாதிமீர் புதினுக்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் விடுத்துள்ள அழைப்பு குறித்து பரிசீலித்து வருவதாக ரஷிய அதிபர் மாளிகை அறிவித்துள்ளது.

6. கிரீன்லாந்து விவகாரத்தில் ஐரோப்பிய நாடுகள் மீது அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கூடுதல் வரி விதித்தால், அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஐரோப்பிய ஒன்றியம் திட்டமிட்டுள்ளது.

7. கௌதமாலாவில் கலவரத்தில் ஈடுபட்டு சிறைகளைக் கைப்பற்றிய கைதிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 7 காவலர்கள் கொல்லப்பட்டனர். இதையடுத்து, சட்டவிரோதக் கும்பல்களை எதிர்த்துப் போராட நாடு தழுவிய 30 நாள் அவசரநிலையை அந்நாட்டு அதிபர் பிரகடனப் படுத்தியுள்ளார்.

8.கேலோ இந்தியா 6 ஆவது குளிர்கால விளையாட்டுப் போட்டிகளின் முதல்கட்ட போட்டிகள் லடாக்கில் உள்ள லே-யில் செவ்வாய்க்கிழமை (ஜன.20) தொடங்கவுள்ளது.

(i) மத்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறையின் முக்கிய திட்டமாக விளங்கும் கேலோ இந்தியா திட்டம், பொது மக்களிடையே விளையாட்டுப் பங்கேற்பை ஊக்குவிப்பதும், சிறந்த விளையாட்டு திறமைகளை உருவாக்குவதும் என்ற இரட்டை நோக்கங்களுடன் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தேசிய அளவிலான பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் ஒன்பது முறையும், பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் ஆறு முறையும், குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் ஐந்து முறையும், மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் இரண்டு முறையும், கடற்கரை விளையாட்டுப் போட்டிகள் ஒரு முறையும் நடத்தப்பட்டுள்ளன.

(ii) நிகழாண்டுக்கான கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் லடாக் மாநிலத்தின் லே மற்றும் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் குல்மார்க் பகுதிகளில் நடைபெறவுள்ளது.

9. ஒருநாள் அரசு முறைப் பயணமாக ஐக்கிய அரபு அமீரக (யுஏஇ) அதிபர் ஷேக் முகமது பின் ஸாயத் அல் நஹ்யான் இந்தியா வந்தார். அவரின் முன்னிலையில் இந்திய- யுஏஇ இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையொப்பமான நிலையில், 2032-ஆம் ஆண்டுக்குள் இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தகத்தை 200 பில்லியன் டாலராக (சுமார் ரூ.18.17 லட்சம் கோடி) அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து வெளியுறவு அமைச்சக செயலர் விக்ரம் மிஸ்ரி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

(i) இந்தியா-யுஏஇ இடையே புதிதாக, வளர்ந்து வரும் துறைகளில் ஒத்துழைப்பு நிலவுவது குறித்து பிரதமர் மோடி, அதிபர் அல் நஹ்யான் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்தியாவில் அணுமின் உற்பத்தியில் தனியார் நிறுவனங்களை அனுமதிக்கும் சட்டம் இயற்றப்பட்டுள்ள நிலையில், அணுசக்தி ஒத்துழைப்பு குறித்தும் அவர்கள் பேசினர்.

(ii) யேமன், காஸா, ஈரான் விவகாரங்கள் குறித்தும் அவர்கள் கலந்துரையாடினர். எல்லை தாண்டிய பயங்கரவாதத்துக்கு இருவரும் கண்டனம் தெரிவித்தனர்.

(iii) யுஏஇ அதிபர் அல் நஹ்யானின் வருகையைத் தொடர்ந்து, பெரிய மற்றும் சிறிய அணு உலைகளை உருவாக்குவது உள்பட அதிநவீன அணுசக்தி தொழில்நுட்பத்தை உருவாக்குவதில் இந்தியா-யுஏஇ கூட்டு சேர்ந்து செயல்படவும், அணுசக்தி பாதுகாப்பு மற்றும் அணுமின் நிலையத்தை உருவாக்கி பராமரிப்பதில் இருநாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பு நிலவவும் முடிவு செய்யப்பட்டது.

(iv) 5 லட்சம் மெட்ரிக் டன் எல்என்ஜி:

கத்தாரை தொடர்ந்து திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவை (எல்என்ஜி) இந்தியாவுக்கு அதிக அளவு விநியோகிப்பதில் யுஏஇ இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்நிலையில், ஆண்டு தோறும் 5 லட்சம் மெட்ரிக் டன் எல்என்ஜியை மத்திய அரசின் கீழ் செயல்படும் ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனத்துக்கு யுஏஇ விநியோகிக்க இருநாடுகளுக்கும் இடையே ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டது.

(v) இருநாடுகளும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் சார்ந்தும் பரஸ்பரம் ஒத்துழைப்பு வழங்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி யுஏஇயின் கூட்டுறவுடன் இந்தியாவில் உயர் செயல்திறன் கொண்ட கணினிப் பயன்பாடு அமைப்பை ஏற்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

(vi) 2023-24-ஆம் நிதியாண்டில் இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தகத்தின் மதிப்பு 84 பில்லியன் டாலராக (சுமார் ரூ.7.63 லட்சம் கோடி) இருந்தது. இதை 2032- ஆம் ஆண்டுக்குள் 200 பில்லியன் டாலராக (சுமார் ரூ.18.17 லட்சம் கோடி) அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(vii) இரு நாடுகளுக்கும் இடையே உத்திசார்ந்த பாதுகாப்பு கூட்டுறவு இருப்பதற்கான செயல்திட்ட ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கு புரிந்துணர்வு சான்று கையொப்பமானது.

(viii) விண்வெளி உள்கட்ட மைப்பு...:

இதேபோல விண்வெளி உள்கட்டமைப்பை உருவாக்க கூட்டு சேர்ந்து பணியாற்றவும் புரிந்துணர்வு சான்று கையொப்பமானது. இதன்படி, புதிய விண்கல ஏவுதளங்கள், விண்கல தயாரிப்பு மையங்கள், விண்வெளி அகாதெமி மற்றும் பயிற்சி மையங்கள் உள்ளிட்டவற்றை ஏற்படுத்த இருநாடுகளும் இணைந்து பணியாற்றும்.

(ix) குஜராத் மாநிலம் தோலேரா பகுதியில் சிறப்பு முதலீட்டு மண்டலத்தை ஏற்படுத்த மற்றொரு புரிந்துணர்வு சான்று கையொப்பமானது. இதன்படி, அந்த மண்டலத்தில் சர்வதேச விமான நிலையம், பசுமை துறைமுகம், எரிசக்தி உள்கட்டமைப்பு உள்ளிட்டவை உருவாக்கப்படும்.

(x) உணவு பாதுகாப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தம் இந்தியாவில் இருந்து யுஏஇக்கு உணவுப் பொருள்கள் மற்றும் பிற வேளாண் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுவதை ஊக்குவிக்கும். இது இந்திய விவசாயிகளுக்கும், யுஏஇயின் உணவுப் பாதுகாப்புக்கும் பயனளிக்கும் என்றார்.

10. பாகிஸ்தான்- போலந்து கூட்டறிக்கையில் காஷ்மீர் குறித்த கருத்து இடம் பெற்றிருந்ததற்கு, போலந்து வெளியுறவுத் துறை அமைச்சரும், துணை பிரதமருமான ரடோஸ்லா சிகோர்ஸ்கியிடம் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் நேரில் கண்டனம் தெரிவித்தார்.

(i) ரடோஸ்லா சிகோர்ஸ்கி 3 நாள்கள் அரசுமுறை பயணமாக தில்லி வந்துள்ளார். அவர் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்துப் பேசினார். அப்போது கடந்த அக்டோபர் மாதம் வெளியான பாகிஸ்தான்-போலந்து கூட்டறிக்கையில் காஷ்மீர் குறித்த கருத்து இடம்பெற்றிருந்ததை ஜெய்சங்கர் சுட்டிக்காட்டினார். மேலும் அவர், பயங்கரவா தத்திற்கு எதிராக போலந்து சிறிதும் சகிப்புத்தன்மை காட்டக் கூடாதென்றும், இந்தியாவின் அண்டை நாட்டில் (பாகிஸ்தா னில்) பயங்கரவாத உள்கட்டமைப்பு அதிகரிப்பதை ஊக்குவிக்க வேண்டாமென்றும் தெரிவித்தார்.